Volume 1 Issue 2 February 2020 E-ISSN: 2582-2063

# பழனியில் தைப்பூசத் திருவிழா

**த.சுமதி**
*உதவிப்பேராசிரியர், வரலாற்றுத் துறை*
*அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டு கல்லூரி, பழனி, இந்தியா*

**முன்னுரை**

ஆறுபடை வீடுகளுள் ஒன்று பழனி, பழனி ஒரு புண்ணியத்தலம் ஆகும். தமிழகத்திலுள்ள முருகன் கோயில்களில் பழனி முருகன் கோயில் முதன்மையானதாகக் கருதப்படுகிறது. தினந்தோறும் எண்ணற்ற பக்தர்கள் இக்கோவிலுக்கு வந்து பழனியாண்டவரை வழிபட்டுச் செல்கின்றனர். மேலும் கேரளா, ஆந்திரா, கர்நாடகம் முதுலிய மாநிலங்களிலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து பழனி முருகனை வழிபடுகின்றனர்.

பழனி தண்டாயுதபாணியின் உருவத் திருமேனி போகர் சித்தரால் நவபாஷாணத்தால் செய்யப்பட்டது என்ற நாட்டுப்புறக் கதைகளும், பாடல்களும் குறிப்பிடுகின்றன. பழனி மலை மீது போகர் சமாதி அமைந்துள்ளது. போகர், புலிப்பாணி முதலிய சித்தர்கள் இத்தலத்தில் வாழ்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய பழனி நகரம் மதுரையிலிருந்து 115 கி.மீ தொலைவிலும், திருச்சியிலிருந்து திண்டுக்கல் வழியாக 153 கி.மீ தொலைவிலும், கோவையிலிருந்து 105 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது. வெளியூர் பயணிகளுக்கு வந்து செல்ல போதுமான போக்குவரத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளது.

திருபதிக்கு லட்டு போல், பழனிக்கு பஞ்சாமிர்தம். பழனியின் பஞ்சாமிர்தம் உலகப் புகழ்ப்பெற்ற ஒரு பிரசாதம் ஆகும்.

**பழனி பெயர்க்காரணம்**

நாரத முனிவர் சிவபெருமானிடம் மாங்கனி ஒன்றை வழங்கினார். தாய், தந்தையரை வணங்கும் பொருட்டு கணபதியும், முருகனும் வந்து சிவனையும், பார்வதியையும் வணங்கினார்கள். சிவபெருமானின் கையிலுள்ள மாங்கனியை இருவரும் கேட்டு, அதற்குச் சிவபெருமான் இருப்பது ஒரு கனி, அதனால் ஒரு நொடிப்பொழுதில் அகில உலகங்களையும் வலம் வருபவர்களுக்கு இக்கனி தரப்படும் என்று கூறினார்.

உடனே முருகப்பெருமான் நீலமயில் மீது ஏறி உலகை வலம் வரச் சென்றார். விநாயகப் பெருமான் அகில உலகமும், தாய்-தந்தையருக்குள் அடக்கம் என்று கருதி தாய-தந்தையரை வலம் வந்து கனியைப் பெற்றார். முருகப்பெருமான் ஒரு நொடியில் உலகத்தை வலம் வந்த பின் கயிலையை அடைந்தார். பழம் கணபதியிடம் இருப்பதைக் கண்டார். கோபம் கொண்ட முருகன் அனைத்தையும் துறந்து தண்டையூன்றி, தண்டாயுதபாணியாகச் சிவகிரியில் (பழனிமலையில்) நின்றார்.

**உமாதேவியார் முருகனைக் காண வருதல்**

உமாதேவியார், தமது இளங்குமரன் கனி பெறாது துறவு பூண்டு தண்டாயுதபாணியாக சிவகிரி சென்றதைக் கண்டு ஆற்றாது சிவபெருமானுடன் சிவகிரியை வந்தடைந்தார். கந்தவேல் தாய்-தந்தையரைக் கண்டு தொழுதார்.

உமாதேவியார், முருகனிடம் நீ ஞானப் பண்டிதன் பழம் வேறு நீ வேறு அன்று. அண்ணனிடம் தந்தது ஞானப்பழமாகிய நீயேயாகும். நீயே ஞானப்பழம். பழம் நீ என்று ஆறுதல் கூறினார்.

அன்றிலிருந்து இத்தலம் பழநி என்று பேர் பெற்றது என்ற பழனித்தலம் புராணம் கூறுகின்றது.

**பழனி முருகன் கோவிலின் திருவிழாக்கள்**

பழனியைப் பொறுத்த அளவில் தைப்பூசமும், பங்குனி உத்திரமும் பெருவிழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன.

**தைப்பூசத் திருவிழா**

தைப்பூசத் திருவிழா இத்தலத்தில் பத்து நாட்கள் கொண்டாடப் பெறுகின்றது. பழனி முருகன் கோயிலின சார்புடைக் கோயிலாகிய அருள்மிகு பெரியநாயகி அம்மன் கோயிலில் கொடி ஏற்றத்துடன் இவ்விழா தொடங்குகிறது. இவ்விழாவின் முதற்பகுதியாக உற்சவமூர்த்தி ரதவீதிகளில் உலா வருதல், தேர்த்திருவிழா, மண்டபப்பட்டி நிகழ்ச்சிகள் ஆகிய பத்துநாள் நிகழ்ச்சிகளைக் கூறலாம்.

இவ்விழாவின் மற்றொரு பகுதியாகத் திருத்தலப் பயணம் (Pilgrimage) அமைகிறது. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் பழனி முருகன் கோயிலுக்குத் திருத்தப் பயணம் வருகின்றனர். குறிப்பாக தேவகோட்டை, காரைக்குடி, புதுக்கோட்டை, திருச்சிப் பகுதி மக்களும், கொங்கு நாட்டுப் பகுதிகளில் வாழும் கிராமப்புற மக்களும், சேலம் பகுதியிலிருந்து இடைப்பாடி பக்தர்களும், கேரள மாநில பக்தர்களும் பெரும் திரளாகத் திருத்தலப் பயணம் வருகின்றனர்.

**நீராடுதல்**

தைப்பூச நாளில் நீராடுதல் முக்கயமாகக் கருதப்படுகின்றது. "பூசம் நாம் புகுதும் புனல் ஆடவே" என்று தைப்பூசத் திருநாளன்று நீராடுவது பற்றி அப்பர் பாடுகின்றார். ஆண்களும், பெண்களும், இளைஞர்களும், முதியோரும் தைப்பூசத் திருநாளன்ற தங்கள் இருப்பிடத்திற்கு அருகிலுள்ள நதிகளில் நீராடுவது வழக்கமாக இருந்து வந்துள்ளது.

தைந்நீராடுதல் எனும் அடிப்படையில் தோன்றியதாகக் கூறப்படும் இத்திருவிழா பூசம் நட்சததிரத்தில் கொண்டாடப்படுவதால் நட்சத்திரங்களின் தலைவனாகப் புராணங்களில் கருதப்படுகின்ற பிரஹஸ்பதி எனும் தெய்வத்தை நோக்கிச் செய்யப்படும் பூசையாகக் கருதப்படுதற்குரியது என்பர். பிரஹஸ்பதி இந்திரனுக்கு குரு. அறிவின் தெய்வமாகக் கருதப்படுகின்றார். எனவே அவரை வணங்குவது அறிவின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டது ஆகும்.

**சக்திவேல் கொடுத்தல**

அன்னை பார்வதி, முருகன் தன்னுடைய போர்ச் செயல்களில் வெற்றிபெற 'சக்திவேல்' கொடுத்த நாள் தைப்பூசம் என்றும், அதனாலேயே இவ்விழா கொண்டாடப்படுவதாக கதைகள் சொல்கிறது.

**தைப்பூசத்தின் சிறப்பு**

"ஒரு காலத்தில் வரகுணபாண்டியன் என்னும் அரசன் மதுரையை ஆண்டு வந்தான். அவன் குதிரைச் சவாரி செய்துவரும் பொழுது அக்குதிரையின் காலில் அடிபட்டு வயது முதிர்ந்த ஓர் அந்தணன் இறந்கு போனான். அதனால் அரசன் பெரும் பாவத்திற்கு ஆளானான். இறந்து போனவனது ஆவி அரசனைப் பிடித்துக் கொண்டது. அரசன் அந்தணனைக் கொன்ற பாவத்திலிருந்தும், ஆவியின் பிடியிலிருந்தும் விடுபட விரும்பினான். பல தலங்களுக்குத் திருத்தலப் பயண்ம செய்தான். பலன் ஒன்றும் ஏற்படவில்லை.

ஒரு நாள் இரவில, மதுரை சுந்தரேசுவரர் அரசனின் கனவில் தோன்றி திருவிடை மருதூருக்குச் சென்ற வழிபட்டால், பாவத்தில் இருந்தும் ஆவியின் கொடுமையிலிருந்தும் விடுபடலாம் என்று கூறினார். சுந்தரேசுவரர் அரசனுக்கு உதவினார். "சோழ மன்னன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வருவான். வந்து தோற்றுப் போவான். தோற்றவனைத் துரத்திக்

கொண்டு சோழநாட்டிற்குச் செல்லும்பொழுது திருவிடை மருதூரை வழிபட்டு வரலாம்” என்று சுந்தரேசுவரர் மன்னனிடம் கூறிகிறார். கனவில் கூறியபடி அனைத்தும் நடந்தது.

பாண்டிய மன்னன் திருவிடை மருதூர்க கோயிலுக்குச் சென்றான். அது தைப்பூசத்தினம். அரசனைப் பிடித்திருந்த அந்தணனின் ஆவி நீங்கியது. பாவத்திலிருந்தும், ஆவியிலிருந்தும் விடுபட்ட மன்னன் திருவிடை மருதூரில் நடைபெறும் தைப்பூசத் திருவிழாவிற்குக் கொடைகள் வழங்கினான்.

இக்கதை பாவம் நீங்குவது, ஆவியின் தொல்லை நீங்குவது பற்றிக் கூறுகிறது. தைப்பூசத்தின் மகிமையை எடுத்துரைக்கிறது.

பூசம், உத்திரம், மகம், பூரம், கிருத்திகை முதலிய நட்சத்திரங்கள் முருகப்பெருமானை வழிபடுவதற்கு உகந்த நட்சத்திரங்கள் என்று பக்தர்கள் கருதுகின்றார்கள்.

**பாதயாத்திரை**

தைப்பூசத் திருவிழாவின் போது மேற்கொள்ளப்படும் பாதயாத்திரை மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், கேரள மாநிலத்திலிருந்தும் பக்தர்கள் கூட்டம், கூட்டமாகப் பழனி முருகன் கோவிலுக்குப் பாதயாத்திரை வருகின்றார்கள்.

**தேவகோட்டை-காரைக்குடிப் பகுதி மக்களின் பாதயாத்திரை**

தேவகோட்டை, காடைக்குடி, திருச்சி, புதுக்கோட்டைப் பகுதிமக்கள் ஆண்டுதோறும் பழனி முருகன் கோவில் தைப்பூசத் திருவிழாவின் போது பாதயாத்தைரை வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

மேலும் சேலம், ஈரோடு, திருப்பூர், பொள்ளாச்சி கோயம்புத்தூர் போன்ற ஊர்களிலிருந்து பாதயாத்திரை வருகின்றனர். இதில் சேலம் எடப்பாடி மக்களும் பாதயாத்திரை வருகின்றனர். இதில் சேலம் எடப்பாடிப பாதயாத்திரைக் குழுவிற்கு தனி சிறப்பு உண்டு அவர்களுக்கு என்று தானியாக இரண்டு நாள் பழனி மலையில் பட்டயம் வழங்கப்பட்டுள்ளது.

இப்படி பாதயாத்திரை வரும் பக்தர்கள் பால் காவடி, பன்னீர் காவடி, மயில் காவடி, சர்க்கரைக் காவடி போன்ற காவடிகளைக் கொண்டு வந்து முருகனுக்கு காணிக்கையாக அளிக்கின்றனர்.

**காவடிப் பாதயாத்திரையின் சிறப்பு**

காவடியுடன் பாதயாத்திரை வருவோர், பயணம் தொடங்குவதற்கு முன்னரும், பயணத்தின் போதும் விரதம் இருக்கின்றனர். இவ்விரம் (48) நாற்பத்தியெட்டு நாட்களுக்கு கடைபிடிக்கின்றனர்.

பயணத்தின் போது பிறருடைய இல்லங்களிலும், கடைகளிலும் இவர்கள் உணவு உண்பது இல்லை. பழனிக்குப் பாதயாத்திரை வரும் பக்தர்கள் தைமாதத்துக் கடும் பனியில் பல மைல்கள் நடந்து பாதயாத்திரை வருவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

**சர்க்கரைக் காவடி**

சர்க்கரைக் காவடி என்பது தூய்மையான நாட்டு சர்க்கரையை அவரவர் திறனுக்கேற்ப ஒரு பித்தளை சொம்பில் நிறப்பி அதை சிவப்பு அல்லது மஞ்சள் துணியால் கட்டி அதை தங்கள் ஊரில் இருந்து விரதம் இருந்து பழனிக்கு கொண்டு வந்து முருகனுக்குப் படைக்கின்றனர்.

இதே போல் பால் காவடி, பன்னீர் காவடியும், இளநீர் காவடியும் செலுத்துகின்றனர்.

**சேவளை காணக்கையாக செலுத்துதால**

பக்தர்கள் சேவளைக் காணிக்கையாக செலுத்துகின்றனர். இதனால் தங்கள் குடும்பத்தில் உள்ள சில பிரச்சனைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும் என்பது ஐதீகம். சேவளை மதியம் 2.30 மணியிலிருந்து 4.30 மணிக்குள் விடுகின்றனர்.

**பாதயாத்திரையின்போது செய்யப்பெறும் பூசைகள்**

பாதயாத்திரையின் போது

1. காவடிப்பூசை
2. வேல்பூசை
3. அன்னதானம்
4. ஊஞ்சல் பூசை போன்ற பூசைகளை முறையாக செய்து முருகனை வழிபடுகின்றனர்.

**அருள்மிகு குழந்தைவேலப்பர் திருக்கோயில்**

வழிநடைப் பயணத்தினால் குழந்தைப்பேறு இல்லாதவர்கள் குழந்தைப்பேறு கிட்டுவதாகப் பலர் நம்புகின்றனர். பழனி வரும் வழயில் ஒட்டன்சத்திரம் அருகில் உள்ள அருள்மிகு குழந்தை வேலப்பர் சன்னதியில் குழந்தை வரம் வேண்டிப் பலர் வழிபடுகின்றனர்.

குழந்தை வரம் வேண்டி, வேண்டிக் கொண்ட பக்தர்கள் பாதயாத்திரை வருவோர் அணைவருக்கும் பிஸ்கட், சாக்லெட் இவைகளைப் பை பையாகத் தானமாக வழங்குகின்றனர். குழந்தை வேலாயுத சாமியை வழிபட்டு குழந்தைக்கு வேண்டிய திண்பண்டங்களைப் பக்தர்கட்டுக் கொடுத்தால் ஆண் குழந்தை கிடைக்கும் என்று பக்தர்கள் நம்புகிறார்கள்.

வாய் பேசாத ஊமைப்பெண் ஒருத்தி, குழந்தை வேலாயுத சாமி அருளினால் வாய் பேசியதாகப் பாதயாத்திரை வரும் பக்தர்கள் கூறுகின்றனர்.

**வெளிநாடுகளில் தைப்பூசத் திருவிழா**

வணிகத்தின் பொருட்டு வெளிநாடு சென்ற நாட்டுக்கோட்டைக் செட்டியார் இனமக்கள் தம்முடன் முருக வழிபாட்டையும் உடன் கொண்டு செல்கின்றனர். இவர்கள் ஆங்காங்கு முருகனுக்கு கோயில் கட்டி விழா எடுத்து வருகின்றனர்.

வெளிநாடுகளில் முருக வழிபாடு பெருகியமைக்க இவர்கள் பெரிதும் காரணம் ஆவர். நகரத்தார்கள் எங்கு சென்றாலும் முருக வழிபாட்டை மறப்பதில்லை.ஸ

**முடிவுரை**

பழனி முருகன் கோவிலுக்கு பல சிறப்புக்கள் உண்டு. பழனி முருகனின் மகிமையை ஒரு கட்டுரையால் கூற முடியாத காரணத்தினால் பழனி முருகனுக்கு பல திருவிழாக்கள் சிறப்பாக நடப்பதால் நான் தைப்பூசத் திருவிழாவை மட்டும் எடுத்துக் கொண்டு எழுதியுள்ளேன். இக்கட்டுரையும் எங்கள் பழனி முருகனுக்கே சமர்பணம்.

**துணை நூற்பட்டியல்**


1. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப்
2. பெருவிழா மலர், 2000
3. ஆறுமுக நாவலர் கே. இந்து மத இணைப்பு விளக்கம் அம்பலவாணார்
4. நிலையம், நாகர்கோவில் 1983.
5. பழனி முருகன் கோயிலும்
6. பாதயாத்திரையும் - முனைவர்.பெ. சுப்பிரமணியன், எம்.ஏ.இ பி.எச்.டி
7. தமிழர் திருவிழாக்களும் பண்பாடும்
8. முனைவர் பெ. சுப்பிரமணியன், எம்.ஏ.இ பி.எச்.டி